**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – விடுதிகள் – 18 பழங்குடியினர் மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Camera) பொருத்துதல் – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை**

அரசாணை(நிலை) எண்.122

நாள்.10.12.2020
சார்வரி, கார்த்திகை மாதம் 25–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டது.

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.ப.மே.ஈ1/2716/2020,
நாள் 07.04.2020 மற்றும் 22.05.2020.

-----

**ஆணை:-**

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் 2020–2021–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

"மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் பெண்குழந்தைகளின் பாதுகாப்பில் மிகவும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையின் படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 63 மாணவியர் விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இத்துறையின் கீழ் இயங்கி வரும் 18 பழங்குடியினர் மாணவியர் விடுதிகளில் 974 மாணவியர் தங்கி கல்வி பயின்று வருகின்றனர் எனவும், இம்மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் ஒரு விடுதிக்கு ரூ.1,50,000/–வீதம் 18 விடுதிகளுக்கு மொத்தம் ரூ.27,00,000/– மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட அனுமதி ஆணை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

3. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததில், அரசாணை எண்.249, நிதித்(BG.I)துறை, நாள் 21.05.2020–இல் இயந்திரமும் சாதனமும் வாங்குதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் படியும் மற்றும் கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக விடுதிகள் காலவரையின்றி மூடப்பட்டுள்ள நிலையில் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 18 பழங்குடியினர் மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திட (CCTV Camera) தற்போது நிர்வாக ஒப்புதல் மட்டும் வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்திற்கென கொள்முதல் செய்ய வேண்டிய கண்காணிப்பு கேமராக்கள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி விதிகளை பின்பற்றி விலை நிர்ணயிக்கப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்பு செய்யப்படும். உரிய ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி ELCOT நிறுவனத்திடமிருந்து பெறப்படும் விலைப்பட்டியலுடன் விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் நிதி ஒப்பளிப்புக் கோரும் கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.46438/ நிதித்(ஆதி(ம)பந) துறை/2020, நாள்.08.12.2020–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

பெறுநர்:–
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர்கள், சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை, திருச்சி.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், சேலம், திருவண்ணாமலை, திருச்சி.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 600 008.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை–600 018.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 600 009.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை– 600 009.
நிதித்(ஆதி(ம)பந/வ.செ.பொ–I/வ.செ.பொ–II)துறை, சென்னை– 600 009.
சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/12/2020
பிரிவு அலுவலர்.
10/12/2020

**இணைப்பு –I**

**அரசாணை(நிலை) எண். 122, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை, நாள்.10.12.2020**

| வ. எண். | விடுதியின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | நாகல்கேணி கல்லூரி மாணவியர் விடுதி | சென்னை |
| 2 | பூலுவப்பட்டி மாணவியர் விடுதி | கோயம்புத்தூர் |
| 3 | மதிகோன்பாளையம் மாணவியர் விடுதி | தர்மபுரி |
| 4 | சத்தியமங்கலம் மாணவியர் விடுதி | ஈரோடு |
| 5 | பேச்சிப்பாறை மாணவியர் விடுதி | கன்னியாகுமரி |
| 6 | பத்துக்காணி மாணவியர் விடுதி | கன்னியாகுமரி |
| 7 | தளி மாணவியர் விடுதி | கிருஷ்ணகிரி |
| 8 | செங்கரை மாணவியர் விடுதி | நாமக்கல் |
| 9 | வாழவந்திநாடு மாணவியர் விடுதி | நாமக்கல் |
| 10 | ஊட்டி கல்லூரி மாணவியர் விடுதி | நீலகிரி |
| 11 | அரும்பாவூர் மாணவியர் விடுதி | பெரம்பலூர் |
| 12 | பிள்ளையூர் மாணவியர் விடுதி | சேலம் |
| 13 | அம்மாப்பேட்டை மாணவியர் விடுதி | சேலம் |
| 14 | ஏற்காடு மாணவியர் விடுதி | சேலம் |
| 15 | ஜமுனாமரத்தூர் மாணவியர் விடுதி | திருவண்ணாமலை |
| 16 | நம்மியம்பட்டு மாணவியர் விடுதி | திருவண்ணாமலை |
| 17 | திருச்சி பெருமாபாளையம் மாணவியர் விடுதி | திருச்சி |
| 18 | துறையூர் மாணவியர் விடுதி | திருச்சி |

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்.

//உண்மை நகல்//

10/12/2020

பிரிவு அலுவலர்

10/12/2020